**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.89/2023**

**வா.சா.– 1– நாகராஜன் த/பெ.கழுவத்தேவர்**

**நாள். 09.02.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் 30.06.1975 ம் தேதியில் பிறந்தேன். நான் 9 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் பிறப்பதற்கு முன்பு என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பட்டா எண் 313 ல் அடங்கிய சொத்து கிரையம் வாங்கப்பட்டதாக எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண் 313 க்கு கட்டுப்பட்ட சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டதற்கான கிரைய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் பட்டா எண் 313 க்கு கட்டுப்பட்ட சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

1ம் வாதி மகேஸ்வரிக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. திருமணம் நடந்த விவரம் தெரியும். அவரது திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்தின் போது 1ம் வாதிக்கு அவர் வீட்டின் சார்பாக 10 பவுன் நகை போடப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அதேபோல் சீர்வரிசைகள் அனைத்தும் செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1ம் வாதியின் மூத்த குழந்தைக்கு காது குத்து விழா நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விழாவில் நானும் வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்தினர் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த காது குத்து விழாவில் மொய் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2ம் வாதி பேச்சிக்கு நடைபெற்ற திருமணம் பற்றி எனக்கு தெரியும். அவருக்கு நடைபெற்ற திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்தின் போது 2ம் வாதிக்கு அவர் வீட்டின் சார்பாக 10 பவுன் நகை போடப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அதேபோல்

சீர்வரிசைகள் அனைத்தும் செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

3ம் வாதி முத்துலெட்சுமி எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. திருமணம் நடந்த விவரம் தெரியும். அவரது திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்தின் போது 3ம் வாதிக்கு அவர் வீட்டின் சார்பாக 15 பவுன் நகை போடப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அதேபோல் சீர்வரிசைகள் அனைத்தும் செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 3ம் வாதியின் ஆண் குழந்தைக்கு காது குத்து விழா நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விழாவில் நானும் வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்தினர் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த காது குத்து விழாவில் மொய் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மகேந்திரன் என்பவர் 3ம் வாதியின் மகன் ஆவார். அவரது திருமண விழாவிலும் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த திருமண விழாவில் மொய் வாங்கப்பட்டது என்றால் இல்லை.

எனது அப்பா கழுவத்தேவர் என்ன வேலை செய்தார் என்றால் விவசாயம் செய்தார். கழுவத்தேவருக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. விவசாயம் பார்த்து என்ன வருமானம் வந்தது என்றால் என்று குறிப்பாக எனக்கு தெரியாது. 1975க்கு நான் பிறப்பதற்கு முன்பாக என் அப்பா விவசாயம் செய்தாரா அதில் எவ்வளவு வருமானம் வந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. பட்டா எண்.313ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் 3 பங்காக பிரித்து நானும் 3,4 பிரதிவாதிகளும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பட்டா எண்.313ல் கட்டுப்பட்ட சொத்தில் எனது பாகம் 3வது பாகம் கிழக்கு பக்கம் ஆகும். எனது பாகத்திற்கு மேற்கு பக்கம் முதலாவதாக மோகனும், அடுத்ததாக திருப்பதியின் பாகங்களும் உள்ளது. மேற்படி விதத்தில் கடந்த 20 ஆண்டுகளாக சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பட்டா எண்.313ல் கட்டுப்பட்ட சொத்துக்களில் எங்கள் மூவரை தவிர வேறு யாருக்கும் பங்கு கிடையாது என்றால் சரிதான்.

என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு எனது தந்தையார் காலத்திலேயே சொத்துக்களை எங்களுக்குள் சமமாக பிரித்துக் கொள்ள ஏற்பாடு இருந்தது என்று சொல்லியுள்ளது எந்த காலம் என்று குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். அது மாதிரி ஏற்பாடு ஆகவில்லை என்பதால்தான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதால் நான் சொல்வது போல் எந்தவித ஏற்பாடும் ஆகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1 முதல் 3 வாதிகளுக்கு எந்த சீர்வரிசையும் ஜாதிப்படி செய்யவில்லை என்று சொல்லியுள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது அப்பா இறந்த பின்பு நானும் 2,3 வாதிகளுக்கு பங்கு கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல.

பட்டா எண்.313 ல் கட்டுப்பட்ட சொத்துக்களில் 4 ம் வாதி மற்றும் 3 முதல் 4 பிரதிவாதிகள் 1 முதல் 3 வாதிகளுக்கு எந்த பங்கும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.313 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் தவிர இதர சொத்துக்கள் 1 ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்களை யார் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் நானும் எனது அண்ணனும் பார்த்து வந்தோம். நான் சொல்வது போல் 1 ம் பிரதிவாதியின் சொத்துக்களில் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது அப்பா இறப்பதற்கு முன்பு சொத்துக்கள் சம்மந்தமாக எந்த பேச்சு வார்த்தையும் நடத்தப்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பின்பு எந்த காலகட்டதில் சொத்து சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடந்தது என்றால் அவர் இறந்தபிறகு 3 வருடங்கள் கழித்து பேசினோம். ஆனால் சமரசம் எட்டப்படவில்லை. மேற்கூறிய விவரங்களை தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் பேச்சு வார்த்தை நடக்காததால்தான் நான் முன்னரே சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எனது நிரூபண வாக்குமூலத்தில 15.05.2020 ம் ஆண்டு பள்ளபட்டியில் வைத்து மேற்படி 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் பேச்சு வார்த்தை நடந்ததாக பாரா 5 ல் சொல்லியுள்ளதற்கு பள்ளபட்டியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் குறிப்பிட்டு நடந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பேச்சு வார்த்தையில் 1 முதல் 3 வாதிகள் கலந்து கொண்டதாகவும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் நான் தாக்கல் செய்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும்., அந்த எதிர்வழக்குரையில் என்னென்ன விவரங்கள் சொல்லியிருந்தார்கள் எந்த விவரம் எனக்கு தெரியாது.

எதிர்வழக்குரையில் கண்டிருந்த விவரங்கள் தெரிந்திருந்தும் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேலே சொன்ன 15.08.2020 நடந்ததாக சொல்லும் பேச்சு வார்த்தையில் பொது நபர்கள் கலந்து கொண்டார்களா என்றால் சீனியப்பன் என்பவர் இருந்தார். அவர் தற்போது இறந்து விட்டார். அதேபோல் 26.2.2023 அன்று நடந்ததாக சொல்லும் பேச்சு வார்த்தை எங்கு, யார் முன்னிலையில் நடந்தது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 26.2.2023 அன்று நடந்ததாக சொல்லும் பேச்சு வார்த்தையில் 1 முதல் 3 வாதிகள் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5,6 ஆவணங்களில் எனது தந்தையார் சாட்சி கையொப்பம் இட்டுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரங்களில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா ஆகியவை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 8 ஆண்டுகள் முன்பு எடுக்கப்பட்ட நகல் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் உள்ள பட்டா ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வேறொரு நபரின் பெயர் காணப்பட்டதால் பழைய பட்டாவை தாக்கல் செய்தேன். நான் சொன்ன பட்டா நபருக்கு நகல் எடுக்க முடியாததால் பழைய பட்டாவை தாக்கல் செய்ததாக சாட்சி கூறுகிறார்.

21.2.2023 அன்று 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று நான் சண்டையிட்டதாக அம்மைநாயக்கனூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து மனுஇரசீது எண்.95/23 பெறப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன். காவல் நிலையத்தில் என்னை தவிர வேறு யார், யார் வந்தார்கள் என்றால் வேறு யாரும் வரவில்லை. விசாரித்து விட்டு மனுவை முடித்து விட்டார்கள். எது சம்மந்தமாக நான் 1ம் பிரதிவாதியுடன் தகராறு செய்தேன் என்றால் குறிப்பாக தெரியவில்லை. 1ம் பிரதிவாதியுடன் சண்டையிட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டதால் மனுவை முடித்து வைக்கப்பட்டது.

பட்டா எண்.313ல் கட்டுப்பட்ட சொத்துக்களில் 3,4 பிரதிவாதிகள் தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ரோஜாபூ , கப்பக்கிழங்கு பயிரிட்டிருந்தார்கள் என்றால் சரிதான். 03.03.2023 அன்று 3,4 பிரதிவாதிகள்

பயிரிட்டிருந்த ரோஜாபூ, கப்பக்கிழங்கு ஆகியவைகளை நானும் மற்ற வாதிகளும் டிராக்டர் வைத்து அழித்தோம் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக 4ம் பிரதிவாதி 4.3.2023 அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் என் மீதும் மற்ற வாதிகள் மீதும் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்தபுகாரின் பேரில் CSR.No.122/23 பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. காவல்துறையினர் என்னையும் மற்ற வாதிகளையும் வரச் சொல்லி அறிவுரை செய்தார்களா என்றால் குறிப்பாக மேற்படி புகாருக்கு சென்றேனா என்பது ஞாபகம் இல்லை. ஆனால் பலமுறை சென்றுள்ளேன். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 2 முறை சென்றிருப்பேன்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பாரா 6ல் 27.02.23 அன்று நாங்கள் அனைவரும் சென்று ஏற்கனவே வாய்க்கரலாக பிரிக்கப்பட்ட தாவா சொத்துக்களை உழுக முயற்சி செய்த போது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் இரண்டு சர்வே எண்கள் கொண்ட சொத்துக்களை காட்டியுள்ளேன். வழக்குரையில் சொல்லியுள்ள 7,8 ஆவணங்களான 10. 12.1974, 15,7.1998 பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யாதற்கு காரணம் உண்டா என்றால் ஏற்கனவே நடந்த வழக்கில் அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருந்ததால் தாவா வழக்கில் ஆவணங்கள் கிடைக்கப் பெறாததால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நான் பதிவு நகல் எடுத்து தாக்கல் செய்திருக்கலாம் என்றால் நகல் வைத்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள சர்வே எண்கள் 40/1 மற்றும்39/1ல் சம்மந்தப்பட்ட கிரைய பத்திர ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் பாரா எண் 5ல் 1ம் பிரதிவாதியின் உள்ள பெயரளவில் உள்ள சொத்துக்களை 3,4 பிரவாதிகள் பெயருக்கு மாற்றம் செய்து கொடுக்க எத்தணித்து வருவதாக நான் சொல்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல் மனு 9 மாதங்களுக்கு முன்பு கொடுத்துள்ளேன். பொதுவாக தடங்கல் மனு கொடுக்கும் போது ஏற்கனவே வில்லங்க சான்று பார்த்துதான் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். வில்லங்கமனு பார்க்கவில்லை. நான் சொல்வது போல் தடங்கல் மனு கொடுக்கவில்லை , அதனால் தான் வில்லங்கம் பார்க்கவில்லை. 1ம்பிரதிவாதியின் அப்பா முன்னாள் ஊர்த்தலைவர் என்றால் எனக்கு தெரியாது. அவர் வசதியானவர் என்றால் சரியல்ல. விவசாய குடும்பம்தான். எனது அம்மாவிற்கு திருமண விழாவில்

அவரது அப்பா நல்லமுறையில் சீர்வரிசை செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி விவசாய வேலை நன்றாக பார்ப்பாரா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பால்மாடுகள் வைத்திருந்தார். 1ம் பிரதிவாதி கூலி வேலைக்கு போகவில்லை. வீட்டில்தான் இருந்தார். நான் பிறப்பதற்கு முன்பாக 1ம் பிரதிவாதியின் திருமணம் ஆனதிலிருந்து நன்றாக விவசாய வேலை செய்தும், பால்டுமாடு தொழில் செய்தார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி அவருடைய சொந்த சுய சம்பாத்தியத்தை கொண்டுதான் தாவா 2வது அயிட்ட சொத்துக்களை அவரது பெயரில் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது தந்தையாரும் கூட்டுக் குடும்பமாக சேர்ந்து வாங்கப்பட்ட சொத்துதான் அது. 1ம் பிரதிவாதி தனது சுய சம்பாத்தியத்தை கொண்டு 2ம் அயிட்ட சொத்தை வாங்கியதால்தான் அவரது பெயரில் வருவாய் ஆவணங்கள் தாக்கலாகி உள்ளது என்றால் சரியல்ல, அது கூட்டுக் குடும்ப சொத்து. நான் சொல்வது போல் கூட்டுக் குடும்பமாக இருந்து வாங்கியிருந்தால் குடும்பத்தின் ஏதாவது ஒரு உறுப்பினர் கையொப்பம் இட்டிருப்பார் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போது எனது அப்பா வருமானத்தை வைத்து எனது அம்மா பெயரில் வாங்கப்பட்டிருந்தாலும் கூட எனது அப்பா சாட்சி கையொப்பம் இட்டிருப்பார் என்றால் சரியல்ல.

எனது அப்பாவின் வருமானத்தை கொண்டு வாங்காததால்தான் அவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி தனது சுய சம்பாத்தியத்தை வைத்து 2வது அயிட்ட சொத்து வாங்கியதால்தான் அவரது அனுபவத்தில் 2023 ம் வருடம் வரை இருந்து வந்தது என்றால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே சொந்தம் என்பதால் அவர் அடமானம் வைத்து மீட்டு வந்துள்ளார் என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி எனது ஆதரவில்தான் இருந்தார். 2015ம் ஆண்டு வத்தலக்குண்டு கிளை ஐசிஐசிஐ வங்கியில் 1ம் பிரதிவாதி வழக்கில் 2வது அயிட்ட சொத்து சம்மந்தமாக அடமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அடமானம் ஏற்படுத்தப்பட்ட விவரம் எனக்கு நன்கு தெரியும். அந்த அடமானம் ஏற்படுத்தப்பட்டது என்னுடைய தேவைக்காக என்றால் நான் எனது மற்றும் 4ம்பிரதிவாதியின் தேவைக்காக எடுக்கப்பட்டது. 4ம் பிரதிவாதியின் பெயரில்தான் குறிப்பாக லோன் எடுக்கப்பட்டது என சாட்சி சொல்கிறார். 4ம் பிரதிவாதி பெயரில் லோன் இருக்கிறது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என் வசம் அந்த ஆவணங்கள் இல்லை. உண்மையில் 4ம்

பிரதிவாதி பெயரில் லோன் எதுவும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எவ்வளவு தொகை லோனாக பெறப்பட்டது என்றால் 3 லட்சம் ஆகும். ஆளுக்கு 1 1/2 லட்சம் வாங்கி கொண்டோம். ஆளுக்கு 1 1/2 லட்சம் வாங்கி கொண்டோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வங்கியில் வைத்து அடமானத்தை திருப்பி விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு திருப்பிய விவரம் 2024-2025 ஆண்டு வாக்கில்தான் தெரியும். எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் பிறர் சொல்லி கேள்விப்பட்டேன். வில்லங்கம் போட்டு பார்த்த போது தெரிய வந்தது.

மேற்படி வில்லங்கம் வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன். நான் வில்லங்கம் எந்த ஆண்டிற்கு போட்டுப் பார்த்தேன் என்றால் 2015 லோன் பெறப்பட்ட ஆண்டிலிருந்து நான் போட்டுப் பார்த்த தேதி வரை பார்த்தேன். அவ்வாறு வில்லங்கம் போட்டு பார்த்திருந்தால் அந்த ஆவணங்களில் அந்த ஆண்டுகளில் நடந்த பரிவர்த்தனைகள் தெரிய வந்திருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு பார்க்கையில் மோகன், காசிநாதன் பெயர்கள் புலஎண்.39 குறித்து தாக்கலாகியிருந்தது. வில்லங்கம் பற்றி தெரிய வந்த பின்பு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நாட்டுப்புற நடவடிக்கை எடுத்தேன், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி விவரங்களை வழக்கறிஞர் சொல்லித்தான் வழக்கு தாக்கல் செய்தேன். 3,4 பிரதிவாதிகளுக்கு பெயர் மாற்றம் ஆனது தெரிந்து கொண்டுதான் தாவா வழக்கை தாக்கல் செய்தேன். எனக்கு தெரிந்தவிவரத்தை எனது வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக வழக்குரையில் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றால் விசாரணை வரும் போது சொல்லிக் கொள்ளலாம் என விட்டு விட்டேன். தாவா வழக்கில் என்ன பரிகாரம் அம்மா சொத்து பொதுவான சொத்து என்பதால் 6 நபர்களுக்குள்ள பங்கை பிரிக்க கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையம் வாங்கிய விவரம் தெரிந்திருந்தும் நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள்தான் 1ம் பிரதிவாதி வைத்த அடமானத்தை மீட்ட பின்பு கிரையம் பெற்றார்கள் என்றால் அவக்ள் பணம் கொடுத்தார்களா என்பது குறித்து எனக்கு தெரியாது. 2015ல் அடகு வைக்கப்பட்டு நீண்ட நாட்களாக மீட்கப்படாமல் இருந்ததால்தான் 3,4 பிரதிவாதிகள் ஏலத்திற்கு செல்லாமல் தடுத்து அந்த தொகையை செலுத்தி மீட்டனர் என்றால் சரியல்ல.

2015 வருடத்துக்கு முன்பாக 15 வருடமாக என் அம்மா என்னுடன் தான் இருந்தார். 2015 க்கு பின்னிட்டு 1 வருடம் இருந்தார். வங்கியில் இருந்த அடமானத்தை மீட்க 1ம் பிரதிவாதி என்னிடம் ஒருமுறை அறிவுறுத்தினார், ஆனால் என்னிடம் சொல்லாமல் அவர் மீட்டு விட்டார். 2015 க்கு பின்பு எவ்வளவு நாள் கழித்து 1 வருடம் கழித்து மீட்குமாறு கேட்டார். அதன் பின்பு என்ன நடந்தது என்று தெரியவில்லை. எனக்கு ஆண்டு வருமானம் சுமார் 1 1/2 லட்சம் வரும். 2015 லிருந்து 3 ஆண்டுகள் விவசாயத்தில் நல்ல வருமானம் வந்தது என்றால் தண்ணீர் அதிகமாக வந்ததால் விவசாயம் அதிகமாக நடக்கவில்லை. 2015 ல் பெற்ற லோனுக்கு 2018 ம் வரை வட்டி கட்டி வந்தேன். மேற்படி வட்டி கட்டியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. லோன் அவர் பெயரில் இருந்ததால் ரொக்கமாக 4 ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். தாவா 2 அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட என்பதால்தான் 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்தும் 4ம் வாதிக்கும், 3,4 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையமாக ஏற்பட்ட ஆவணத்தை பற்றி தெரிந்திருந்தும் பரிகாரம் கோராததால் அதை நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்துக்களில் சர்வே எண். 40/1 ஐ தவிர மற்ற சொத்துக்கள் 3,4 பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட கிரைய சொத்து என்பதால் அது குறித்து பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கல்ல என்றாலும், உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 40/1 தற்போது வரை 1ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி உயிருடன் இருப்பதால் அவர் காலத்தில் பாகப்பிரிவினை கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.09 18:24:30 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.